ISSN - 2235-9796

16 பக்கங்கள் 30/-

# Valai வலை


சமகால பொது அறிவுத் தொகுப்பு

உண்மை
நேர்மை
நம்பிக்கையே
உயர்ச்சி தரும்

சிலந்தி - 04 நவம்பர் - 2014 இழை - 38




சச்சின் சுயசரிதை 13



உலக யோகா பிரகடனம் 07



ரோஹித் சர்மா 14

**வாசக நெஞ்சங்களுக்கு...!**

வலையின் இதழ் 38 ஆவது இழையில், உங்களைச் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். எப்படி சௌக்கியமாக இருக் கிறீர்களா?

எம் மத்தியில் இப்படியும் சில பேர் இருக்கிறார்கள். அதாவது சில நேரங்களில் சில மனிதர்கள். அதனை உங்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டுமென நினைப்பதுண்டு ஆனால் மறந்துவிடுகிறேன்.

தொலைபேசியில் சிலர் தம்மை ஆசிரியர் என்றும், இன்னும் சிலர் பல்கலைக்கழக விரிவுரையாளர் என்றும் தம்மை அறிமுகப்ப டுத்திக் கொண்டு முகம் தெரியாத படித்த இப்பிரகிருதிகள் புத்தக சாலைகளில் 'வலை' முடிவடைந்து விட்டதெனவும், எனவே தமக்கு வலை வேண்டுமென்றும் கூறுவர். எனவே இதனை எப்படிப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் என்னிடம் கேட்பர்.

இவர்கள் மட்டில் அக்கறை கொண்டுள்ள நான் மனமிரங்கி நகரில் குறிப்பிட்ட சில இடங்களைக் குறிப்பிட்டு அங்கு கொடுத்து விடுகிறேன், குறித்த தொகையைக் கொடுத்து விடுங்கள் எனக் கூறி, எனது வேலைப்பழுவின் மத்தியிலும் குறிப்பிட்ட இடத்துக்குச் சென்று கொடுத்து விட்ட பின்னர் தொலை பேசியூடாக குறித்த நபர்களுக்கு தகவல் சொல்வதுண்டு.

பின்னர் அங்கு சென்று ஏதாவது தந்தார்களா என்று கேட்கின்ற பொழுது ஏமாற்றமே மிஞ்சியது. எனவே இவ்வாறானவர்களை என்னவென்று சொல்வது? படித்தவர்களே இவ்வாறு ஏமாற்ற வெளிக்கிட்டால்...! மற்றவர்கள் எப்படி...! எனவே நீங்கள் இதில் எந்த வகை?

ஆகவே இவர்கள் எமது சமூகத்தை எவ்வாறு வழிநடத்தப் போகிறார்கள்...? இறைவன் இவ்வாறானவர்களை நன்கு கவனித் துக்கொள்வான்.


இந்த இதழ் தொடர்ந்து வெளிவருவது உங்கள் கைகளிலேயே தங்கியுள்ளது. எனவே உங்கள் ஆதரவில் எனது பணி தொடரும்...

'வலை' வீசல் தொடரும்...

நன்றி.

சி.என்.எச்.சாள்ஸ்
தொகுப்பாசிரியர்

## இம்மாத சர்வதேச தினங்கள்...




- ✧ நவம்பர் - 09 - உலக சுதந்திர தினம்
- ✧ நவம்பர் - 10 - உலக பொதுநலவாய தினம்
- ✧ நவம்பர் - 10 - உலக மலாலா தினம்
- ✧ நவம்பர் - 11 - உலக நகரத் திட்டமிடல் தினம்
- ✧ நவம்பர் - 11 - உலக போர் தினம்
- ✧ நவம்பர் - 11 - உலக நினைவூட்டல் தினம்
- ✧ நவம்பர் - 13 - உலக அன்பு தினம்
- ✧ நவம்பர் - 14 - உலக குழந்தைகள் தினம்
- ✧ நவம்பர் - 14 - உலக நீரிழிவு தினம்
  இவ்வருட தொனிப்பொருள் : **"நீரிழிவைத் தவிர்க்கலாம் அதற்குச் சகலரும் ஒன்று சேர வேண்டும்"**
- ✧ நவம்பர் - 16 - உலக சகிப்புத்தன்மை தினம்
- ✧ நவம்பர் - 17 - உலக மாணவர் தினம்
- ✧ நவம்பர் - 18 - உலக மனநோயாளிகள் தினம்
- ✧ நவம்பர் - 18 - உலக கை கழுவும் தினம்
- ✧ நவம்பர் - 19 - உலக கழிவறைகள் / மலசல கூட தினம்
- ✧ நவம்பர் - 19 - உலக ஆண்கள் தினம்
- ✧ நவம்பர் - 19 - உலக குடியுரிமையாளர் தினம்
- ✧ நவம்பர் - 20 - உலக சிறுவர்கள் / குழந்தைகள் உரிமைகள் தினம்
- ✧ நவம்பர் - 21 - உலக ஹலோ தினம்
- ✧ நவம்பர் - 21 - உலக தொலைக்காட்சி தினம்
- ✧ நவம்பர் - 25 - உலக பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு தினம்
- ✧ நவம்பர் - 26 - உலக சட்ட தினம்
- ✧ நவம்பர் - 30 - உலக கணினி பாதுகாப்பு தினம்

## இலங்கை பற்றிய இம்மாத வலை வீசலில்...

❒ இலங்கை வங்கி தனது 75 ஆவது ஆண்டு பூர்த்தியினை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் நவம்பர் 19 தேசிய மரநடுகை சமூக வேலைத் திட்டத்தினைச் செயற்படுத்தியது. அத்திட்டத்தின் பெயர் என்ன?
**துரு மித்துரு**
தொனிப்பொருள் : "சுற்றாடலைப் பாதுகாப்போம்"

❒ ஆசியாக் கண்ட நகர மேயர்களின் மாநாடு இவ்வாண்டு (21.11.2014) எங்கே நடைபெற்றது?
**கொழும்பில்**

❒ எதிர்வரும் ஜனவரி 8 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் எத்தனையாவது?
**7 ஆவது**

- ஐ.நா.வில் அண்மையில் இடம்பெற்ற இளைஞர் மாநாட்டில் இலங்கையின் பிரதிநிதியாக கலந்து கொண்ட யுவதி யார்?
  பால்ராஜ் மஹீஷா

- கொஸ்வத்தை மண்சரிவு அனர்த்த மீட்பு நடவடிக்கைகளுக்கு உதவத் தயாராகவுள்ளதாக முதலில் கூறிய நாடு எது?
  அமெரிக்கா

- சீன நாட்டின் பாரிய கண்காணிப்புக் கப்பல் அண்மையில் 3 நாட்கள் கொழும்பு துறைமுகத்தில் தரித்து நின்றது. அக்கப்பலின் பெயர் என்ன?
  யுவாங் வாஸ் -3 **(Yuan Wang)**

- அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த வெளிநாட்டு ஊடகவியலாளர் குழுவினர் யார்?
  கொரிய நாட்டு ஊடகவியலாளர் குழு

- வடக்கு மாகாண சபையால் எந்த மாதம் மரநடுகை மாதமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது?
  நவம்பர் மாதம்

- ஐ.நா. சபையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அண்மையில் யாழ். குடா நாட்டுக்கு விஜயம் செய்தார். அவர் யார்?
  பிலிப் டி வேட்

- 2015 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நாடாளுமன்றில் 2 ஆம் நாள் வாசிப்பு எத்தனை வாக்குகளினால் வெற்றி பெற்றது?
  100 வாக்குகளினால்

- மன்னார் பகுதியில் அண்மையில் அறிமுகம் செய்யப்பட்ட புதிய நெல்லி னத்தின் பெயர் என்ன?
  பிஜி -370

- கொழும்பு துறைமுகத்துக்கு அண்மையில் வந்து சென்ற இரண்டு தென் கொரியக் கப்பல்களின் பெயர் என்ன?
  சேய்யாங், சியோன்ஜி

- அண்மையில் கொழும்பு, யாழ்ப்பாணம் வந்து சென்ற பிரிட்டன் விஞ்ஞானி யார்?
  வின்சன் சிமித்

- இவ்வாண்டு (2014) நடைபெற்ற தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் குறைக்கப்பட்ட மாவட்ட வெட்டுப்புள்ளிகள் எவை?
  யாழ்ப்பாணம் - கிளிநொச்சி - வவுனியா - 150, முல்லைத்தீவு-மன்னார்-149

////////////////////////////////////////////////////////////////////////

❒ இலங்கையின் நிர்வாக மாவட்டங்கள் ஒவ்வொன்றினதும் தனித்துவம் மிக்க பண்புகள் முக்கியத்துவமான அடையாளங்கள், சிறப்புப் பண்புகளையும் உள்ளடக்கிய நாணயம் அண்மையில் இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்டது? அது எத்தனை ரூபாய் நாணயக் குற்றி
10 ரூபா

❒ 61 வயதிலும் கலாநிதிப் பட்டம் பெற்றுச் சாதித்த இலங்கைத் தமிழர் யார்?
சின்னையா குகநேசன்
(வலிகாமம் கல்வி வலய முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர்)

❒ இலங்கையின் பழைமையான விடுதிகளில் ஒன்றான கொழும்பு கோல் பேஸ் ஹோட்டலின் மூத்த ஊழியர் (வயதான வரவேற்பாளர்) அண்மையில் காலமானார். அவர் யார்?
கே.சட்டுகுட்டான் (வயது-94)

❒ புகழ்பெற்ற இலங்கையின் மூத்த எழுத்தாளர் அண்மையில் அவுஸ்ரேலியாவில் மறைந்தார். அவர் யார்?
எஸ்.பொன்னுத்துரை (அப்பா எஸ்.பொ)

❒ காணாமற் போனோர் தொடர்பான விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்க மேலும் ஒரு ஆலோசகர் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் யார்?
மொட்டு நொகுசி (ஜப்பான்) கடந்த 26.11.2014 முதல் நியமனம்

❒ கொஸ்லந்தையில் இயற்கை அனர்த்தத்தில் மரணமடைந்த மக்களுக்கு தமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்த நாடுகள் 5 தருக?
சுவிற்சர்லாந்து, பங்களாதேஷ், போலந்து, பெல்ஜியம், கியூபா

❒ எயிட்ஸ் நோயினால் இலங்கையில் இன்று வரை (நவம்பர் 2014) எத்தனை பேர் உயிரிழந்துள்ளனர்?
359 பேர்
இதேவேளை, 772 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் கொழும்பில் 561 பேரும், கம்பஹாவில் 36 பேரும், கண்டியில் 42 பேரும் உள்ளனர். (பிரதி சுகாதார அமைச்சின் தகவலிலிருந்து...)

❒ இலங்கையில் முதன் முறையாக தேசிய விஞ்ஞான வாரம் எப்போது பிரகடனம் செய்யப்பட்டது?
நவம்பர் - 4 - 10 வரை
இதேவேளை, கொழும்பு பௌத்தாலோக மாவத்தை, சுதந்திர சதுக்கப் பகுதிகள் விசேட விஞ்ஞான வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

❒ இலங்கை முழுதுவதும் மேசைப் பந்து விளையாட்டினை அபிவிருத்தி செய்ய முன்வந்துள்ள நாடு எது? சீனா

- ❒ 'என் எழுத்தாயுதம்'' என்ற நூலின் ஆசிரியர் யார்?
  **என். வித்தியாதரன்**

- ❒ 2017ஆம் ஆண்டில் மக்கள் தொகையின் ஒரு இலட்சம் பேருக்கு எத்தனை தாதியர் இருக்க வேண்டுமென சுகாதார அமைச்சு கூறியுள்ளது?
  **160 பேர்**

- ❒ இலங்கையிலுள்ள மிகப் பெரிய இரண்டாவது விலங்குக் காட்சிச்சாலை எது?
  **பின்னவெல யானைகள் சரணாலயத்திற்கு அண்மையில் 45 ஏக்கரில் அமைக்கப்பட்டு வருகிறது. இது இவ்வருட இறுதிக்குள் திறந்து வைக்கப்பட வுள்ளது.**
  இதேவேளை, இங்கு 'மாலுயா அபேகம' என்ற பெயரில் ஒரு புதிய கிராமமும் உருவாக்கப்படவுள்ளது.

- ❒ பழைய நெல்லினங்களை விதைத்து கூடுதல் விளைச்சளைப் பெறும் விவசாயி களுக்கு விவசாயத் திணைக்களம் எடுத்துள்ள நடவடிக்கை என்ன?
  **பரிசு வழங்கும் திட்டம்**

## இலங்கையில் இன்று இவர்கள்...

- ⌖ சுவீடன் நாட்டு புதிய பிரதமர் யார்?
  **ஸ்டெ∴பான் வோ∴ப்வென்**

- ⌖ இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் யார்?
  **ரஞ்சித் ரொட்றிக்கோ**

- ⌖ யாழ்.மாவட்ட இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?
  **மேஜர் ஜெனரல் ஜெகத் அல்விஸ்**

- ⌖ மாந்தை உப்புக் கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவர் யார்?
  **எம்.எம்.அமீன்**

- ⌖ இலங்கை மேசைப்பந்து சங்கத்தின் தலைவர் யார்?
  **வஸந்த அழகியவண்ண**

## உலகை நோக்கிய இம்மாத வலை வீசலில்...

- ◈ பூர்கினா பாஸோவில் ஜனாதிபதிக்கு எதிராக அந்நாட்டு பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கான காரணம் யாது?
  அந்நாட்டு ஜனாதிபதியாகப் பதவி வகிக்கும் பிளெயஸ் கடந்த 27 வருடங்க

ளாக ஜனாதிபதியாக பதவி வகித்து வருகின்றார். எனவே தனது பதவிக் காலத்தை மேலும் நீடிக்கும் வகையில் அரசியலமைப்பில் மாற்றத்தை ஏற் படுத்த திட்டமிடப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே மேற்படி ஆர்ப்பாட் டம் நடைபெற்று வருகிறது.
இவ் ஆர்ப்பாட்டத்தில் இதுவரை 30 பேர் பலியாகியுள்ளனர். 100 இற்கு அதிகமானோர் காயமடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

◇ அண்மையில் பலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரித்த நாடு எது?
**சுவீடன்**

◇ உலகிலேயே பெண்கள் பயணிப்பதற்கு அபாயகரமான நகர்கள் என அண் மைய ஆய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அந்த நகரங்கள் எவை?
**லத்தீன் அமெரிக்க நகரங்கள் (கொலம்பிய பொகோடா)**

◇ ஆண்களின் கைபந்து விளையாட்டினைப் பார்வையிட்ட ஈராக்கியப் பெண் ணுக்கு அந்த நாடு விதித்துள்ள தண்டனை என்ன?
**ஒரு வருட சிறை (கொன்செஹ் கவமி (வயது-25)**

◇ நதிக்கு மேலாக 138 அடி உயரத்தில் கண்ணாடி நடைபாதை அமைக்கப்பட்டு அண்மையில் எந்த நாட்டில் திறந்து வைக்கப்பட்டது.?
**லண்டன் கோபுர பாலத்தில் தேம்ஸ் நதிக்கு மேலாக**

◇ முதல் தடவையாக விமான சகாசக் குழுவில் இணைத்துக் கொள்ளப்பட்ட பெண்மணிகள் எந்த நாட்டினர்? **சீனா**

◇ ஜி-20 அமைப்பின் உச்சி மாநாடு இந்த முறை (2014) எந்த நாட்டில் நடை பெற்றது?
**அவுஸ்ரேலியாவின் பிரிஸ்பேனின் நகரில்**

◇ அமெரிக்கா முதன் முதலாக முஸ்லிம் மாலுமிகளாலேயே கண்டுபிடிக்கப்பட் டது. என்ற கருத்தை அண்மையில் வெயிட்டவர் யார்?
**துருக்கிய ஜனாதிபதி றிசெப் தாயிப் எர்டோகன்**

◇ தனது 5 வயதில் மைக்ரோ சொப்ட் பரீட்சை எழுதி அந் நிறுவனத்தின் உயர் தொழில் தகைமைச் சான்றிதழ் கிடைக்கப்பெற்ற சிறுவன் யார்?
**ஐயன் குரேஷி (பிரித்தானியா)**

◇ ஐ.நா. சபை வெளியிட்ட சமீப அறிக்கையின்படி உலகளவில் அதிக இளை ஞர்களைக் கொண்ட நாடு எது?
**இந்தியா**
இதேவேளை இரண்டாவது - சீனா, மூன்றாவது - இந்தோனேசியா
தி.பவர் ஆப் 1.8 பில்லியன் என்ற பெயரில் ஐ.நா. அறிக்கை வெளியிட்டுள் ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

◇ கராத்தே தற்பாதுகாப்புக் கலையில் புதிய எட்டாவது உயர்மட்ட கறுப்புப் பட்டியை அண்மையில் ஒரு நாட்டினது ஜனாதிபதி பெற்றுள்ளார். அந்த ஜனாதிபதி யார்?
**ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் (வயது-83)**

◇ எந்த நாட்டின் பாராளுமன்றத்தில் அண்மையில் பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் உரையாற்றினார்?
**ஐரோப்பிய பாராளுமன்றில்**

◇ லெபனானின் பிரபல பாடகியும், நடிகையுமான பெண்மணி அண்மையில் காலமானார். அவர் யார்?
**சபாஷ் (வயது-87)**

◇ ஆளில்லா புதிய வகை விண்கலத்தை விண்ணுக்கு அனுப்பி வெற்றிகரமாக பூமிக்குத் திரும்பியுள்ளது. இவ்வாறு அனுப்பி 3 ஆவது உலக நாடு எனப் பெருமை பெற்றுள்ள நாடு எது?
**சீனா**
இதேவேளை, நிலவுக்குச் சென்று மீண்டும் பூமிக்குத் திரும்பும் விண்கலத்தை இது அமெரிக்காவும், ராஷ்யாவும் மட்டுமே கண்டறிந்து சாதனை படைத்துள் ளமை குறிப்பிடத்தக்கது.

◇ அந்தமான் அருகே வங்கக் கடலில் அண்மையில் தோன்றிய புயலின் பெயர் என்ன?
**அஷோபா**

◇ பெண்கள் காரோட்டுவதற்கு அண்மையில் அனுமதி வழங்கியுள்ள நாடு எது?
**சவுதி அரேபியா**

◇ பெண்கள் வாழ்வதற்கான சிறந்த நாடு என்ற பட்டியலில் இலங்கை எத்த னையாவது இடத்தைப் பெற்றுள்ளது?
**79 ஆவது**
முதலாவது - ஐஸ்லாந்து, இரண்டாவது - பின்லாந்து, மூன்றாவது - நோர்வே

◇ உலக யோகா தினம் கடைப்பிடிக்கப்பட வேண்டுமென ஐ.நா. சபையில் உரையாற்றிய உலக நாட்டின் தலைவர் யார்?
**நரேந்திர மோடி**
யூன் -21 ஆம் திகதியை சர்வதேச யோகா தினமாக கடைப்பிடிக்க 130 நாடுகள் ஐ.நா. சபையில் ஆதரவு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

◇ உலகளாவிய ரீதியில் தீவிரவாதத் தாக்குதல்கள் அதிகரித்த நாடுகளில் முதலிடத்தில் உள்ள நாடு எது?
**ஈராக்**
இரண்டாவது - ஆப்கானிஸ்தான், மூன்றாவது - பாகிஸ்தான்

◇ எபோலா வைரஸ் பாதித்தவர்கள் தனது நாட்டுக்குள் நுழைவதற்கு 3 மாத காலம் தடை விதித்துள்ள நாடு எது? **இந்தியா**

◇ எதிர்வரும் டிசம்பர் - 16 - 22 (2014) ஆம் திகதி வரை உலகம் முழுவதும் இருளாக தொடர்ந்து இருக்கும் (சூரிய மண்டலப் புயல்) எனக்கூறிய நாசாவின் தலைவர் யார்?
**சார்ஸ் போல்டன்**

◇ சர்வதேச எதிர்ப்பையும் மீறி எந்த நாட்டில் அண்மையில் தேர்தல் நடை பெற்றது?
**கிழக்கு உக்ரெய்னில்**

◇ அண்மையில் பேர்ளினில் ஜேர்மன் சர்வாதிகாரி ஹிட்லரின் சுயசரிதைப் புத்தகம் எத்தனை பவுண்ஸிற்கு ஏலத்தில் விற்பனையாகியது?
**19, 000 ஆயிரம்**

◇ பிரான்ஸ் பேரரசன் நெப்போலியனால் அணியப்பட்ட தொப்பி அந்நாட்டில் இடம்பெற்ற ஏல விற்பனையில் எவ்வளவு அமெரிக்க டொலருக்கு விற்பனை யாகியது?
**2.4 மில்லியன் அமெரிக்க டொலர்**

◇ சர்வதேச தீவிரவாதம் தொடர்பான பிந்திய ஆய்வு மையம் தனது அறிக்கை யில், தீவிரவாதத்தால் மிகவும் மோசமாகப் பாதிப்படைந்த நாடாக எதனைக் குறிப்பிட்டுள்ளது?
**ஈராக்**
அடுத்தடுத்துள்ள நாடுகளாக ஆப்கான், பாகிஸ்தான், நைஜீரியா மற்றும் சிரியா.

◇ எதிர்வரும் டிசம்பர் மாதம் (2014) இலங்கை வரவுள்ள சர்வதேச கால்பந்தாட்ட சங்க சம்மேளனத்தின் தலைவர் யார்?
**செப் பிளட்டர்**

◇ உலகளாவிய சிந்தனையாளர்கள் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துள்ள நபர் யார்?
பிரதமர் நரேந்திர மோடி - அமெரிக்காவில் உள்ள வெளிநாட்டுக் கொள்கை என்ற பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

◇ 2014 உலகின் சக்திவாய்ந்தவர்களில் செல்வாக்கு மிக்க தலைவர்களின் பட்டியலில் இந்தியப் பிரதமர் மோடி எத்தனையாவது இடத்தில் உள்ளார்?
**15 ஆவது.**
முதலாவது - ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின்
இரண்டாவது - அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா
மூன்றாவது - சீன ஜனாதிபதி ஷின்ஜன் பிங்

நான்காவது - பாப்பாண்டவர் பிரான்சிஸ்
ஐந்தாவது - ஜேர்மன் அதிபர் ஏஞ்சலா
அமெரிக்கா போர்ப்ஸ் சஞ்சிகை தகவல் வெளியிட்டுள்ளது...

- கவர்ச்சியான கண்களை வெளியில் காட்டுவதற்கு தடை விதித்துள்ள நாடு எது?
**சவூதி அரேபியா**

- நாய் வளர்த்தால் 74 சவுக்கடி வழங்கும் நாடு எது?
**ஈரான்**

- பிரெஞ் மொழியானது காதல் ததும்பும் மொழி என்று மகுடம் சூட்டிய இணையத்தளம் எது?
**கூகுள் (Google)**

- உலகில் மிகவும் உயரமும், குள்ளமுமான மனிதர் எனப் பெயர் பதித்தவர் யார்?
**உயரம் - சுல்ரன் கொசன் (8 அடி 2.5 மீற்றர், வயது - 31, துருக்கி)**
**குள்ளம் - சந்ர பகதூர் டங்கி (55 சென்ரி மீற்றர், வயது - 75, நேபாளம்)**

- ஐக்கிய நாடுகள் சிறுவர்களுக்கான நிதியம் 2014 ஆம் ஆண்டை என்ன ஆண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ளது?
**"சர்வதேச சிறுவர் ஞாபகார்த்த வருடம்"**

- உலகின் அதிபயங்கர பெண் தீவிரவாதி எனக் கூறப்படுபவர் உக்ரைன் நாட்டில் அண்மையில் சுட்டுக்கொல்லப்பட்டார். அவர் யார்?
**ஓயிட் விடோ (சமந்தா)**

- ரஷ்யாவுடன் போரிடத் தயாரென அறிவித்துள்ள ஜனாதிபதி யார்?
**உக்ரைன் நாட்டு ஜனாதிபதி பெட்ரோ பொரொஷென்கோ**

- எதிர்வரும் 2020 ஆம் ஆண்டுக்குள் செவ்வாய்க் கிரகத்தைச் சுற்றி ஆய்வு செய்யும் வகையில் புதிய செயற்கைக் கோளை விண்வெளிக்கு அனுப்ப வுள்ள நாடு எது?
**சீனா**

- 900 கிலோ மீற்றர் தூரத்துக்குப் பாயும் ஏவுகணையை பாகிஸ்தான் வெற்றி கரமாகச் சோதனை செய்துள்ளது. அந்த ஏவுகணையின் பெயர் என்ன?
**ஷாகின்-1ஏ**

- அண்மையில் கனடாவில் தரையிறங்கிய உலகின் மிகப்பெரிய விமானம் எது?
**அன்ரனோவ் 225**

இது ரஷ்ய விண்வெளி ஆய்வகத்தினால் வடிவமைக்கப்பட்டது. 275 அடி நீளம், 640 மெற்றிக் தொண் எடையைக் காவும் வல்லமை படைத்தது.

◇ இணையத்தளப் பாவணையில் முதல் மூன்று இடங்களைப் பிடித்துள்ள நாடுகள எவை?
**முதலாவது - சீனா**
**இரண்டாவது - இந்தியா**
**மூன்றாவது -அமெரிக்கா**

◇ 2014 நவம்பர் மாத இறுதியில் கலைக்கப்பட்ட பாராளுமன்ற எது?
**ஜப்பான் நாடாளுமன்றம்**

◇ குழந்தைகள் குறித்து ஐ.நா.வில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் யாது?
**குழந்தை திருமணத்திற்கு தடை விதித்தமை**

◇ தேநீர் தயாரிக்கும் இயந்திரத்தினை முதன் முதலாக சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு எடுத்துச் செல்லும் பெண் யார்?
**சமாந்தா கிரிஸ் டொ∴பொரெட்டி (எஸ்பி ரஸ்ஸோ தேநீர்)**

◇ ஜப்பான் நிறுவனத்தினால் விரைவில் கடலுக்கு அடியில் கட்டப்படவுள்ள அதி நவீன நகரத்தின் பெயர் என்ன?
**"அட்லாண்டிஸ்"**

◇ சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தில் ஆய்வுகள் மேற்கொண்டுள்ள விஞ்ஞானிகளுக்கு உணவுப் பொருட்கள் உள்ளிட்ட முக்கிய பொருள்களை எடுத்துச் செல்ல நாசாவினால் தயாரிக்கப்பட்டுள்ள விண்கலத்தின் பெயர் என்ன? **சோயஸ்**

◇ அண்மையில் தனது பதவியிலிருந்து விலகிய அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் யார்?
**சக் ஹாகெல் (வயது-68)**

◇ முதுமையின் தத்துவங்களைக் கண்டுபிடித்த பிரப்ல மருத்துவ விஞ்ஞானி அண்மையில் காலமானார். அவர் யார்?
**டென் ஹாம் ஹார் (வயது - 98, ஓமாஹா)**

◇ அரபு லீக் என்ற பட்டியலில் ஐ.நா. சபையின் பிரத்தியேகக் குழுவாக இயங்கும் நாடுகள் எவை?
அல்ஜீரியா, பஹ்ரேன், கொமொரோஸ், ஜிபூடி, எகிப்து, ஈரான், ஜோர்தான், குவைத், லெபனான், லிபியா, மொறீசியர்ஸ், மொரோக்கோ, ஓமான், பாலஸ்தீனம், கந்தர், சவூதி அரேபியா, சோமாலியா, சூடான், சிரியா, டியுனீஷியா, ஐக்கிய அரபு இராஜ்ஜியம் (ஸிதிரி) யெமன் போன்றவையாகும்.

◇ பொது இடத்தில் புகைப்பிடித்து தன்னிடம் சிக்கிக்கொண்ட நபருக்கு அபராதம் பெற்றுக்கொடுத்த துருக்கி நாட்டு ஜனாதிபதி யார்?
**ரிசப் தயிப் எர்துகான்**

◇ குவைத்தில் வாழும் நாடற்ற ஆயிரக்கணக்கான அரபு மக்களுக்கு ஆபிரிக்காவில் எந்தத் தீவில் குவைத் அரசினால் குடியுரிமை வழங்கப்படவுளன்ளது?
**கொமொரோஸ்**

◇ பூமிக்கு 300 மில்லியன் தொலைவில் இருக்கும் வால் நட்சத்திரத்தில் வரலாற்றில் முதன் முறையாக தரையிறக்கப்படவுள்ளதாக ஐரோப்பிய விண்வெளி ஆய்வு மையம் அறிவித்தது. அந்த இயந்திரத்தின் பெயர் என்ன?
**பைலீ (பிலே)**

◇ பசுமை இல்ல வாயுவைக் குறைப்பது தொடர்பாக புதிய உறுதிப்பாடு செய்து கொண்ட நாடுகள் எவை?
ரஷ்யா - சீனா

◇ அல் ஹொய்தா தலைவர் ஓசாமா பின்லேடனை சுட்டுக் கொன்றவர் தான் எனக் கூறியுள்ளவர் யார்?
**அமெரிக்க முன்னாள் நேவி சீல் வீரர் ரொபர்ட் ஓனைல்**

## உலகின் இன்றைய நிலையில் இவர்கள்...

◎ அமெரிக்காவின் புதிய சட்டத்தரணிகள் நாயகமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள பெண் யார்?
**வோரெட்டா வின்ச் (வயது-55)**

◎ அல்பேனிய நாட்டின் பிரதமர் யார்? எடி ரமா

◎ பர்கினா பாசோ நாட்டின் புதிய இடைக்கால ஜனாதிபதி யார்?
**இராணுவத் தளபதி ஐசக் யாகோபா**

◎ ஐ.ந. சபையின் தெற்காசிய பிராந்தியத்துக்கான மகளிர் நல்லெண்ண தூதராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?
**இந்தியாவின் முன்னிலை வீராங்கனை சானியா மிர்ஷா**

◎ மொறிடேனிய நாட்டின் ஜனாதிபதி யார்?
**மொஹமட் அல்ன்ட் அப்டெல் அஸிஸ்**

---

**உங்கள் பார்வையில் வலை...**

உங்களது கருத்துக்களை எழுதி, Passport அளவு புகைப்படத்தினையும் இணைத்து அனுப்புங்கள். அவை காலக்கிரமத்தில் வலையில் பிரசுரிக்கப்படும்.

# விளையாட்டுப் பக்கம் நோக்கிய வலை வீசலில்...

- தனது சுயசரிதையை வெயிடவுள்ள முன்னணி ரென்னிஸ் வீராங்கனை யார்?
  **சானியா மிர்ஷா**

- இந்த ஆண்டின் (2014) 5 ஆவது சதத்தைப் பூர்த்தி செய்த தென்னாபிரிக்கா வின் கிரிக்கெட் வீரர் யார்?
  **காஸிம் அம்லா**

- உதைபந்தாட்டத்தில் "ஹெட்ரிக் கோல்" அடித்து (253) புதிய சாதனை படைத்த வீரர் யார்?
  **லயனல் மெஸ்ஸி (ஆர்ஜென்டினா)**

- அடுத்த 2018 உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டி எங்கே நடைபெற வுள்ளது?
  **ரஷ்யாவின் தலைநகர் மொங்கோவில்**
  **யூன் -8 - யூலை 8 வரை**
  இத்தொடருக்கான கால்பந்து (லோகோ) குறியீட்டுச் சின்னம் விண்வெளியில் இருந்து அண்மையில் அறிமுகம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

- உலக பில்லியர்ட்ஸ் சம்பியன் ஷிப் தொடரில் இந்தியாவைச் சேர்ந்த இளம் வீரர் சம்பியன் பட்டம் வென்றார். அவர் யார்?
  **பங்கஜ் அத்வானி**

- மூன்றாவது முறையாகவும் சிறந்த கால்பந்தாட்ட வீரருக்கான தங்கக் காலணி விருதினைப் பெற்றுக்கொண்ட வீரர் யார்?
  **கிறிஸ்டியானோ ரொனால்டோ**

- உலக செஸ் சம்பியன் பட்டத்தை மீண்டும் கைப்பற்றிய வீரர் யார்?
  **மக்னஸ் கார்ல்ஸன்**
  ரஷ்யாவின் கோச்சியில் அண்மையில் நடைபெற்றது.

- கால்பந்துக் களத்தில் நடுவராகக் களமிறங்கவுள்ள மொடல் அழகி யார்?
  **கிளாடியா ரொமானி (வயது-32) இத்தாலி**

- இலங்கை கிரிக்கெட் அணிக்கு உளவியல் ஆலோசகரை நியமிப்பதற்கு ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் தீர்மானித்துள்ளது. அந்த ஆலோசகர் யார்?
  **ஜெரெமி ஸ்னேப்**
  இவர் விளையாட்டுத்துறை ஆலோசகரும், இங்கிலாந்தின் முன்னாள் சுழல் பந்து வீச்சாளருமாவார்.

⊙ அவுஸ்ரேலியாவுக்கு எதிராக 90 ஆண்டுகளுக்குப் பின் தொடர்ச்சியாக 3 சதம் அடித்த முதல் வீரர் யார்?
**யூனிஸ்கான்**

⊙ கிரிக்கெட்டின் தசாப்தம் என்று அழைக்கப்படும் சச்சின் டெண்டுல்காரின் சுயசரிதைப் புத்தகம் அண்மையில் (06.11.2014) வெளியிடப்பட்டது. அப்புத்தகத்தின் பெயர் என்ன?
**'பிளேயிங் இட் மை வே'** (எனது வழியில் விளையாடுகிறேன்)
(Playing it my Way)




- இப் புத்தகத்தை எழுதிய கிரிக்கெட் விமர்சகர் யார்?
  **போரியா மஜும்தார்**
- 416 பக்கங்களைக் கொண்ட இப்புத்தகம் இரு நாட்களில் 2 இலட்சம் பிரதிகள் விற்பனையாகி சாதனை படைத்தது.
- மேற்படி புத்தகம் குறித்து கருத்து வெளியிட்டுள்ள பிரபல எழுத்தாளர் யார்?
  **மகரந்த் வைன்கர்**

⊙ கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் மாற்றுத்திறனாளிகளுக்கென முதன் முறையாக அறிவிக்கப்பட்டுள்ள விளையாட்டு எது?
**"செஸ்"**
இப்போட்டியில் முதன் முறையாகப் பங்கேற்றுசாதனை படைத்த முதல் மாற்றுத் திறனாளியான பெண் யார்?
**ஜெனிதா (சென்னை)**

⊙ டில்லி மரதன் ஓட்ட வரலாற்றில் குறைந்த நேரத்தில் பந்தயத் தூரத்தைக் கடந்த வீரர் என்ற சாதனை படைத்த எதியோப்பிய வீரர் யார்?
குய் **அடோவா (எதியோப்பியா)**

⊙ பவுண்சரின் வேகத்தில் கடந்த காலத்தில் உயிர் பறிபோன வீரர்கள் யார்?
**- ராமன் வம்பா - இந்திய வீரர் 1998 இல் உயிரிழந்தார்.**
**- நரி கான்ட் ராக்டர் (இந்திய வீரர், 1962 இல் உயிரிழந்தார்)**

⊙ அண்மையில் வெளியிடப்பட்ட சர்வதேச ரென்னிஸ் வீர, வீராங்கனைகளின் தரப்படுத்தலில் சர்பியாவின் நொவாக் ஜோகோவிச் மற்றும் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் ஆகியோர் தொடர்ந்து முதலிடத்தைத் தக்க வைத்துள்ளனர். இப்புதிய தரப்படுத்தலில் முதல் 5 இடங்களைப் பெற்றவர்கள் யார்?

**வீரர்கள்**

1. நொவாக் ஜோகோவிக் (சர்பியா)
2. ரோஜர் பெடரர் (சுவிற்சர்லாந்து)
3. ரபாயெல் நடால் (ஸ்பெயின்)
4. ஸ்டெனிஸ்லாஸ் வல்ரின்கா (சுவிற்சர்லாந்து)
5. தோமஸ் பர்டிக் (செக் குடியரசு)

வீராங்கனைகள்

1. செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா)
2. மரிய ஷரபோவா (ரஷ்யா)
3. சிமோனா ஹாலேப் (ருமேனியா)
4. பெட்ரோ குலிடோவா (செக்குடியரசு)
5. அனா இவானோவிக் (சர்பியா)

**நுண்ணறிவு - IQ**

நுண்ணறிவு தவிர்க்க முடியாத காரணத்தினால் இந்த இழையில் வெளிவரவில்லை அடுத்த இழையில் வெளிவரும். நன்றி. (தொ.ஆ)

⊙ இலங்கை கிரிக்கெட் அணிக்கு உதவி பயிற்றுனராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளவர் யார்?
**டிரெவர் பென்னி (இங்கிலாந்து)**

⊙ அண்மையில் அவுஸ்ரேலியாவில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் வேகமான அரைச்சதம் மற்றும் சதத்தைப் பெற்று புதிய உலக சாதனை படைத்த வீரர் யார்?
**மிஸ்பா உல் ஹக் (பாகிஸ்தான் அணியின் தலைவர்)**

⊙ டெஸ்ட் தர வரிசையில் பாகிஸ்தான் எத்தனையாவது இடத்துக்கு முன்னேறியுள்ளது?
**3 ஆவது இடத்துக்கு**
முதலாவது - தென்னாபிரிக்கா, இரண்டாவது - அவுஸ்ரேலியா

⊙ அடுத்த உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி எந்த நாட்டில் நடைபெறவுள்ளது?
**அவுஸ்ரேலியா, நியூஸிலாந்தில்**
பரிசுத் தொகை : 60 கோடி இதேவேளை, சுப்பர் ஓவர் நீக்கப்பட்டுள்ளதாக ஐ.சி.சி.அறிவித்துள்ளது.

⊙ இலங்கை கிரிக்கெட் அணியின் களத்தடுப்பு பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?
**ட்ரவர் பென்னி (இந்தியா)**

⊙ கிரிக்கெட் இரசிகர்களுக்கு நடுவரின் செயல்முறை பற்றி தெளிவை ஏற்படுத்த ஐ.ஐ.சி. எடுத்துள்ள நடவடிக்கை என்ன?
**நடுவர்களின் உரையாடலை ரசிகர்கள் கேட்பதற்கு ஏதுவாக அதனை ஒளி பரப்பப்படவுள்ளது.**
இதேவேளை, அடுத்த ஆண்டு உலகக் கிண்ணத்தில் ஒரு சில போட்டிகளிலும் இந்த முறை இணைக்கப்பட வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

⊙ ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் 250 ஓட்டங்கள் பெற்ற முதல் துடுப்பாட்ட வீரராக உலக சாதனை படைத்த இந்திய வீரர் யார்?
ரோஹித் சர்மா
அண்மையில் நடைபெற்ற இலங்கையுடனான கொல்கத்தாவில் நடைபெற்ற போட்டியிலேயே இச்சாதனையைப் படைத்தார்.

# அயல் நாட்டுப் பக்கமாக வீசிய வலையில்....

⊙ அண்மையில் தமிழக காங்கிரஸ் தலைவர் பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்டவர் யார்?
**ஈ.வி.கே.எஸ். இளங்கோவன்**

⊙ அந்தமான் அருகே உருவாகிய புதிய புயலின் பெயர் என்ன?
**"அஷோபா"**

⊙ தனது உடல் உறுப்புக்களை அண்மையில் தானம் செய்த நடிகர் யார்?
**நடிகர் சூர்யா**
இதேவேளை, இந்தியாவில் முதன் முதல் திரைப்பட நடிகர் சுப்பர் ஸ்ரார் ரஜனிக்காந்தே தனது கண்களை தானமாகக் கொடுக்க உறுதிப்பத்திரம் வழங்கிய நடிகராவார்.

⊙ இந்தியாவின் சோபால் விஷ வாயு வழக்கில் கடந்த 1983 ஆம் ஆண்டு முதல் தேடப்பட்டு வந்த குற்றவாளி அண்மையில் அமெரிக்காவில் காலமானார். அவர் யார்?
**வாரன் அண்டர்ஷன்**
மேற்படி விஷ வாயுக் கசிவினால் 3 ஆயிரத்து 787 பேர் மூச்சுத்திணறி பலியாகினர் என்பது குறிப்பித்தக்கது.

⊙ முன்னாள் பிரபல கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்காரின் மகன் அர்ஜீன் எந்த அணியில் இருந்து தென்னாபிரிக்காவில் உள்ள பள்ளி அணிகளுடன் விளையாடச் செல்கிறார்?
**மும்பையைச் சேர்ந்த வோர்லி கிரிக்கெட் அணி**

⊙ உலகின் மிகவும் உயரமான காற்றாலை கோபுரம் எங்கே அண்மையில் திறந்து வைக்கப்பட்டது?
**இந்தியாவின் குஜராத் மாநிலத்திலுள்ள கட்ச் மாவட்டத்தில்**

⊙ பிரதமர் நரேந்திர மோடியின் அமைச்சரவையில் புதிய அமைச்சர்களாக எத்தனை பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்?
**21 மொத்தமான அமைச்சர்களின் எண்ணிக்கை 66 ஆக அதிகரித்துள்ளது.**

⊙ உலகின் மிகவும் வயதான மனிதர் தற்சமயம் எங்கே கண்டு பிடிக்கப்பட்டுள் ளார்? அவர் யார்?
**இந்தியாவில்**
மகாஸ்தா முராசி (வயது-179)

⊙ உலகின் 2 ஆவது உயரமான மின்மாற்றி எங்கு அமைக்கப்பட்டு வருகின்றது?
**இந்தியாவின் மேற்கு வங்காள மாநிலத்தின் ஹால்டியாவில் அமைக்கப்பட்டு வருகின்றது.**

## விருதுகள் பக்கம் வீசிய வலையில்...

❖ "நேசநெத்ரு" என்னும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட நம் நாட்டுக் கலைஞர் யார்?
**சங்கீத வித்துவான் (வித்வான்) ஏ.கே.கருணாகரன்**
இதனைத் தொடர்ந்து இவருக்கு வடமாகாண முதலமைச்சர் விருதும் வழங்கப்பட்டுள்ளது.

❖ சிறந்த பிரபலத்துக்கான விருது இவ்வாண்டின் (2014) சர்வதேச திரைப்பட விழாவில் யாருக்கு வழங்கப்பட்டது?
நடிகர் ரஜனிக்காந்

❖ 2014 நவம்பர் மாத முற்பகுதியில் அரச இசை விருதுவிழாவில்- வாழ்நாள் சாதனையாளர் விருது யாருக்கு வழங்கப்பட்டது?
**கலாசூடமணி எஸ்.சண்முகராகவன்**

❖ அமெரிக்காவில் இடம்பெற்ற அலெக்ஸ்ஸான்ரியா சர்வதேச திரைப்பட விழாவில் சிறந்த வெளிநாட்டு திரைப்படத்திற்கான விருதினைப் பெற்றுக் கொண்ட திரைப்படம் எது?
**மௌன விழித்துளிகள்**

❖ இந்தியாவில் வருடாவருடம் வழங்கப்படும் "மதுரா மாமனிதர்" விருது இந்த முறை கிடைக்கப்பெற்ற பெண்மணி யார்?
**சுனிதா கிருஷ்ணன்**
மனித நேயச் சேவை செய்வோரில் சிறந்த ஒருவருக்கு பணப் பரிசுடன் இவ்விருது வழங்கப்பட்டு வருகின்றது.

### வேலைவாய்ப்பு படிவங்கள்

அரச வர்த்தமானியில் வெளிவருகின்ற அனைத்து வேலைவாய்ப்புப் படிவங்களும் என்னால் வெளியிடப்பட்டு வருகின்றன. அதனை யாழ்.பூபாலசிங்கம் புத்தகசாலை உட்பட குடாநாட்டின் முன்னணி புத்தக நிலையங்களில் மட்டும் பெற்றுக்கொள்ள முடியும்.

Valai வலை
சமகால பொது அறிவுத் தொகுப்பு

### சந்தா விபரம் - Delivered to Your Home

உங்கள் சந்தா தொகையை சி.என்.எச்.சாள்ஸ் என்ற பெயரில் யாழ். பிரதம தபாலகத்தில் மாற்றக் கூடியதாக காசுக் கட்டளை (Money Order) அனுப்பப் படுதல் வேண்டும். அல்லது உங்கள் பகுதியில் உள்ள கொமர்ஷல் வங்கியில் C.N.H. Charles, Commercial Bank (Stanley Road,Jaffna) 8127011186 என்ற சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்து வங்கி ரசீதுடன் உங்கள் முழுப் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பன அடங்கிய விண்ணப்பத்தினை எனது முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். அத்துடன் எத்தனையாவது இழையிலிருந்து அனுப்ப வேண்டும் என்பதையும் குறிப்பிடுங்கள். இதழின் பிரதிகள் கண்ணியமாக உங்களுக்குத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.



**50/- விலைக் கழிவுடன் வருடச் சந்தா 300/- மட்டுமே.**

வாழ்க வையகம் - வாழ்க வளமுடன்

தொடர்புக்கு : சி.என்.எச்.சாள்ஸ், 163 செம்மணி வீதி, நல்லூர். தொ.இல : 0776913337
heyncharles@gmail.com